# மணநாள் வாழ்த்து!

06-12-2021



பணியிலே பயணித்த பக்குவ காலத்தில்,
அணியாக சிலரது அன்பிலே தோய்ந்திட்டேன்!
மணியாக ஒருவரை மறுபடியும் சந்தித்தேன்!
மருவிலா உறவின்வழி உட்பொருளாய் நிறைந்திட்டார்!

பெருமகனார் **இரமணன் - விசாலாட்சி** இணையரின்;
அருந்தவச் செல்வி **பிரீதா** காணும் மணநாளில்,
திருமகனாய், **விஜயா - இராமதாஸ்** ஈன்ற **யோகேஷ்**தனை
ஒருமித்து வாழ்ந்திடவே கைத்தலம் பற்றுகிறாள்!



அரியதாய் வாழ்க்கையதும் அமையப் பெற்று,
பெருமைகள் பலவுமாய் மண்ணில் கொண்டு,
அருளாய் மணமாய் அவனியில் வாழ்ந்திட,
பெருமைகொள் இறையவனை வேண்டுவேனே!

**கு.ப. அசோகன்** (Retired-Customs)
06-12-2021



